www.freetnbooks.com

6 R

Register No.

# இரண்டாம் பருவத் தேர்வு – 2025

நேரம் : 2 மணி **தமிழ்** மதிப்பெண்கள் : 60

பகுதி I

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக 10x1=10

1. பிறரிடம் நான் ................ பேசுவேன்.
அ. கடுஞ்சொல் ஆ.இன்சொல் இ. வன்சொல் ஈ.பொறை

2. 'உதித்த' என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ............
அ.மறைந்த ஆ.நிறைந்த இ. குறைந்த ஈ. தோன்றிய

3. பழையன கழிதலும் ............. புகுதலும்
அ. புதியன ஆ. புதுமை இ. புதிய ஈ. புதுமையான

4. ஆராயும் அறிவு உடையவர்கள் ......... சொற்களைப் பேசமாட்டார்கள். அ.உயர்வான ஆ. விலையற்ற
இ. பயன்தராத ஈ. பயன்உடைய

5. 'நானிலம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .......
அ.நா+னிலம் ஆ.நான்கு+நிலம் இ. நா+நிலம் ஈ. நான்+நிலம்

6. பெருமை+வானம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .................. அ.பெருமைவானம் ஆ.பெருவானம்
இ. பெருமானம் ஈ. பேர்வானம்

7. பண்டம்+மாற்று என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் .......
அ.பண்டமாற்று ஆ.பண்டம்மாற்று இ. பண்மாற்று ஈ. பண்டுமாற்று

8. தவறான சொல் .............
அ.கண்டான் ஆ.வென்ரான் இ. நண்டு ஈ. வண்டு

9. ஆசாரக்கோவையின் ஆசிரியர் .............
அ.ஔவையார் ஆ.பெருவாயின் முள்ளியார்
இ. பாரதியார் ஈ. முடியரசன்

10. பிறர் நமக்குச் செய்யும் தீங்கைப் பொறுத்துக்கொள்வது ............ ஆகும். அ.வம்பு ஆ.அமைதி இ. அடக்கம் ஈ. பொறை

II. பொருத்துக. 5x1=5

11. விடிவெள்ளி - பஞ்சு மெத்தை
12. மணல் - ஊஞ்சல்
13. புயல் - போர்வை
14. பனிமூட்டம் - கண்ணாடி
15. முழுநிலவு - விளக்கு

பகுதி II

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி 5x2=10

16. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
17. 'கண்மணியே கண்ணுறங்கு' பாடலில் குறிப்பிடப்படும் மூன்று நாடுகள் யாவை?
18. உழவர்கள் ஏன் மாடுகளுக்கு நன்றி செலுத்துகின்றனர்?



www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com

19. நாம் எத்தகைய சொற்களைப் பேசவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?
20. நான்கு நிலங்கள் என்பன யாவை?
21. அலையையும், மேகத்தையும் மீனவர்கள் என்னவாகக் கருதுகின்றனர்?
22. பண்டமாற்று முறைக்கு எடுத்துக்காட்டு தருக.
23. இன எழுத்துகள் என்றால் என்ன?

IV. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்கவும் 3x2=6

24. படிப்போம்; பயன்படுத்துவோம் - அ) Gratitude ஆ) Merchant
25. பின்வரும் சொற்களைப் பிழை திருத்தி எழுதுக.
அ) தெண்றல் ஆ) நன்ரி
26. அடைப்புக்குள் உள்ள சொல்லைத் தக்க இடத்தில் சேர்த்து எழுதுங்கள்.
அ) நீங்கள் வரும்போது எனக்குப் புத்தகம் வாங்கி வாருங்கள் (ஒரு)
ஆ) நாம் உரங்கள் தயாரித்து உழவர்களுக்கு வழங்க வேண்டும். (இயற்கை)
27. கீழ்க்காணும் தொடர்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.
அ) அஃது நகரத்திற்குச் செல்லும் சாலை.
ஆ) அது ஒரு இனிய பாடல்.
28. கீழ்க்காணும் குறளில் உள்ள எதுகை, மோனைச் சொற்களை எடுத்து எழுதுக.
உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்.

## பகுதி III

V. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளிக்க 3x3=9

29. தாய் தன் குழந்தையை எவ்வாறெல்லாம் பாராட்டுகிறாள்?
30. காணும் பொங்கலை மக்கள் எவ்வாறு கொண்டாடுகின்றனர்?
31. சொல்லின் இடையில் மட்டும் வரும் எழுத்துகள் எவை?
32. தமிழனின் செயல்களாக முடியரசன் கூறுவன யாவை?
33. சிறுவணிகம், பெருவணிகம் - வேறுபடுத்துக.

## பகுதி IV

VI. மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக. 2x2=4

34. 'வெள்ளத்து' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.
35. 'சொல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பகுதி V

V. விரிவாக விடையளிக்கவும் 2x8=16

36. அ) அறிவுசால் ஔவையார் - என்னும் நாடகத்தைச் சிறுகதை வடிவில் சுருக்கமாக எழுதுக. (அல்லது)
ஆ) உழைப்பே மூலதனம் கதையைச் சுருக்கி எழுதுக.
37. அ) கட்டுரை எழுதுக - பொங்கல் திருநாள் (அல்லது)
ஆ) பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றதற்குப் பரிசு அனுப்பிய மாமாவுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் எழுதுக.



www.freetnbooks.com | FREETNBOOKS